முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1042

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.08.2022, சனிக்கிழமை

1. பிரம்ம சூட்சும பலம் நிறைந்த
   பிரணவ சக்திமிகு அரங்கனே
   வரம்பல பெற்று கலியுகம் தன்னில்
   வள்ளலாய் வாழும் ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தொடர்ந்துரைப்பேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 21 நாள், 06.08.2022 சனிக்கிழமை)
   ஆசிதந்து அரங்கன் நீ எந்த மாந்தனை
   அகிலத்தில் ஞானியாக்க எண்ணுகின்றாயோ
3. ஆனதொரு அவர்களெல்லாம் இந்த கலியிலே
   அறிவிப்பேன் ஞானிகளாவது உறுதியப்பா
   உறுதிகொண்டு உன் வழியை எவர் ஏற்று ஒரே குரு அரங்கன் நீயே என சரணடைவு
   கருதி கலியுகத்தில் செயல்படுகின்றாரோ கட்டாயம் அவர்கட்கெல்லாம் கந்தவேலன்
   என்னருள் பலம் உண்டு உண்டு
4. உண்டப்பா உன்வழி உலக மாற்றம்
   உயர்வாக உன் சன்மார்க்க நெறிகொண்டு
   தண்டாயுதன் யானே நடத்தி அருள்வேன்
   தக்கபடி தரணியில் ஞானவான்களை
5. ஞானவான்களை உன் தர்மவழிகொண்டே
   ஞானபண்டிதன் தேர்வு செய்து வருகின்றேன்
   தானதருமம் மிகுதி செய்துகொண்டு
   தவராஜன் உன்னை வணங்கும் மக்களுக்கு
6. மக்களுக்கு இனி பிறவி இல்லை இல்லை
   மரணமும் நெருங்காத வாழ்வு தந்து
   தந்துமே கந்தவேலன் இனிதே அவர்கட்கு
   தரணியிலே ஞானவான்கள் என்கின்ற சிறப்புதன்னை
7. தன்னையே வரமாக பலமாக
   தவமாக தாமுரைப்பேன் சர்வ சக்தியுமாக
   ஆகவே அருளி ஆறுமுகன் யான்
   அரங்கன் உன் ஞானம் கொண்டே உலகோர்க்கு சிறப்புதருவேன்
8. ஆகவே உலகமக்கள் அரங்கன் உன் வழி
   அணுகி வந்தால் இந்த கலியுகத்தில்
   யுகமாற்றம் நடப்பது சடுதி உறுதிஉறுதி
   உரைத்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–